617

உ

மகாகணபதி துணை

திருவெண்ணெய்நல்லூர்

# ஸ்ரீ முத்து
# மாரியம்மன் பதிகம்

இஃது

திருவெண்ணெய்நல்லூர்

மு. சு. இரங்கசாமி உடையார் குமாரர்

சிப்பாய் துரைசாமி உடையாரால்

இயற்றப்பட்டு,

ஷை யூர் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ

தி. அ. பொன்னரங்கம் பிள்ளை

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு

விழுப்புரம்

...க்மணி விலாஸ பிரஸில்

...ப்பிக்கப்பட்டது.

1934 [0—0—6

O25.38.214 J34
N34.
174868

# முகவுரை.

அன்பர்காள்!

இப்பூவுலகின்கண் சைவசமய குரவர்கள் நால்வரால்போற்றி பாடப்பெற்றும், அன்னாரிலொருவரும் வன்றொண்டரெனும் ஆலாலசுந்தரரை திருமணந்தடுத்து ஆண்டு அடிமைகொண்டவரு மான அருட்டுறைநாதன் ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ கிருபா புரீசன் திருக்கோயில்கொண்டு அன்பர்கட்கு என்றும் அருள்பாலி ப்பான் பதியாக எழுந்தருளியிருக்கும் திருவெண்ணெய்நல்லூ ரென்னும், இந்நடுநாட்டின்கண் ஓர் திவ்வியக்ஷேத்திரமாக ஆன் றோர்கள் பூஜித்து வருவது யாவரும் நன்குணர்ந்ததே. இவ்வித பதியின் ஈசான்யதிக்கின்கண் திருக்கோயி லமைக்கப்பெற்று பதியாய்வீற்று அன்பர்கட்கு அருள்பாலிப்பான். வேண்டி உள மதுகொண்டு உகந்தருளிய ஸ்ரீவனரேணுகாதேவியின் பாதாம்புஜ வழிபாட்டின்கண் பக்தி மேலீட்டினால் யான் இப்பதிகம் பாட லுற்றேன். இதில் சொற்குற்றம் பொருட் குற்றமிருப்பினும் தனயனதுகுற்றம் தாய்மறைப்பதுபோல் குணமென்றே கொண்டு அனைவரும் ஆதரித்து போற்றுமாறு பிரார்த்தியாநின்றனன்.

இங்ஙனம்,

**மு. ர. துரைசாமி உடையார்,**

எக்ஸ் சிப்பாய், திருவெண்ணெய்நல்லூர்.







உ

கடவுள் துணை.

### வெண்பா.

அத்திமுகமுடைய ஐங்கரனும் ஓங்காரச்
சத்திக்கணபதியின் றருள்பணிந்து—பத்தியொடு
மாரியம்மன்பதிகம் மனந்துணிந்து யான்பாட
கூரியனுவளிப்பான் கொண்டு.

---

## பதிகம்.

செகலந்தன்னிலே நடுநாடாம் வெண்ணெய்நகர்
தேரோடும்வீதி வடபால்
செல்வி ஓங்காரியுமை நடுவீதிதனிற்கோறி
சிறப்பாகவே துதித்தார்

செல்வச்சிறுபாலர்கள் அனைவருளங்கொண்டு நீ
சீர்திருத்தமாகப் பந்நாட்
சென்றுரத்தாக்ஷியாம் கார்த்திகை பதினாறு
ஸ்ரவண நாட்டன்னிலே
சிறப்பாகதிருக்கோயில் கொண்டுபலராலும்
ஜெயஜெயவென்று போற்ற
செடல்போடும்உற்சவம் நவநாளும்நடந்தேற
தேவிநீ அருளளித்தாய்
செங்கைவடிவேலனும் காளபயிரவன் கணேசன்சூழ்
காட்சிமிகவே யருளும்
சீதரன்தங்கையே சோதிமகமாரியே
திருவெண்ணெய் முத்துமாரியுமையே. (1)

அலைகடற்சூழுலகம் எங்கெங்கு முன்பெருமை
அன்பனுன் சொல்லவெளிதோ
அனந்தகல்யாணகுண அரவமணிபூஷணி
அன்பர்மனம் கோயில்கொண்டாய்
அடாதலோபியர் கர்மவினை சண்டாளர்
ஆயினுமுனை துதித்தார்க்கு
அஞ்சக்கரமெனும் பஞ்சாட்க்ஷரம் கொண்டுநீ
அறுத்திடுவாய் பிணியனந்தம்
அங்கயற்கண்ணியே சிங்கவாகனி சூலி
அன்பத்தோரக்ஷாத்தி

அவ்வொடுகிலியுமாம் ஸ்ரீங்காரிநவகோணி
அன்புமிகு என் அன்னையாம்
ஆத்திமலர்கொன்றையணி அதிவீரசத்தியே
அஷ்டாக்ஷரசுரூபியே
அன்பர்மிகு திருவெண்ணெய் மெய்கண்டார்மடவீதி
அமர்ந்த முத்துமாரியுமையே. (2)

முத்தெனப்பல்வரிசை மின்னுமிளநகையுடன்
மூக்கணியாடும் நத்தும்
முழுவயிற ரத்னமணி தங்கமதிலிழைத்திலகு
ஆபரணமொளிருமழகும்
முன்னவர்கள் புகழ்நவமணியின லிழைத்திட்ட
முடிசூடு மகுடமழகும்
மூங்கிலெனவளர்ந்தோங்கும் இருபுஜநேர்மையும்
முன்கையில் வீரவாளும்
முனிவுறுநயனமது அருள்தரு விலாசமும்
மொய்குழல் கூந்தலழகும்
முக்கோண நாற்கோண எண்ணில்லாகோணமதில்
முன்னின்று அருள்புரிகுவாய்
முக்கினியும் தேன்பாகுதித்திக்கும் அமிர்தமெனு
சத்துவகுண முடையதாயே
முனைபாடி நடுநாடு திருவெண்ணெய்பதியோங்கு
முத்துமக்மாரியுமையே. (3)

முத்தெனுதவள் நகைவிழி கருணைமதிமுக்
 மீதிலகு திலர்தமழகும்
முல்லைக்கொடிஎன துவண்டிடுமிடையினில்
 முழுபட்டு ஒட்டியாணமும்
முன்கையில் கங்கணவளையலொடு மோதிரம்
 முத்துசர மாலையழகும்
முத்துக்குடமெனும் இறுகொங்கை மார்பழகும்
 மூதறிஞர் போற்றுகின்ற
முன்னழகும் பின்னழகும் அன்னநடைசாயலும்
 மூங்கையான் சொல்லதரமோ
முனைவீரர் எலாம்புகழ் கதலிநிகர் துடைகளுள
 மாரியுன் பாதமழகும்
முடியினுற் பணிந்திருபாதம் துதித்திட
 மூடனுலாகுமோதான்
முத்தமிழ் கவிபுலவர் கம்பர்துதி வெண்ணெய்நகர்
 முத்துமகமாரியுமையே. (4)

அத்தனிட இடபாகம் சத்தியாய் அமர்ந்தவளும்
 அகோர வீரபத்ர
அங்காளியானவளும் அனவரதம் அகிலமெலாம்
 அன்பர்கள் துதித்துப்போற்ற
அரனிடஅம்சமெனும் ஜமதக்னிபூசைக்கு
 அம்மைநீ பத்னியானுய்

அமரர்கள்முதலான ஜீவகோடிகட்கு நீ
அன்புசால் தாயுமானாய்
அடங்காத பில்லிசூனியம் வைப்பேவல்பேய்
அலருஜன்னிசுரங்கள் முதலாய்
அனேகவிதநோய்களும் அம்மைநின்பேர்சொல
அலறிப் பறந்தோடுமே
அன்பர்சூழ்பணியணி ஆனவோர்கண்மணி
ஆகுமென் நல்லன்னையே
அறம்மிகுபினாகினிதென்பால் வெண்ணெய்நகர்
அமர்ந்த முத்துமாரியுமையே. (5)

சத்தியாய்உலகெலாம் சித்துவிளையாடியே
சங்கரி கொலுவமர்ந்தாய்
சடாக்ஷரி தேவர்பணி ஓங்காரிஆங்காரி
சண்முகனை ஈன்றதாயே
சங்கரி பரம்பரி நிரந்தரி துரந்தரி
திகம்பரி கௌரி நீலி
சதாகாலம் உன்னையே பாடித்துதித்திட
சர்வவல்லப மருளுவாய்
சச்சிதானந்தியே உத்தமசுரூபியே
எத்திசைமதிக்கும் உமையே
சதிராகமருளர்பலர் வேலலகுபூட்டியே
சாரியாய் ரதமிழுக்க

சர்வஜன கூட்டமுடன் வீதியில் பவனிவர
சர்ஜனர் கோஷ்டம் செய்ய
சத்துசித்தாகியே திருவெண்ணெய் பதியமர்
முத்துமகமாரி யுமையே. (6)

கனகசபை திருனடன காளிய பிராமியே
காவடி பலர் தூக்கியே
கரகம் விளையாடியே விருது மிக கூறியே
கால் நடையாய் ஆடி வருக
கைத்தாள பம்பையொடு தவுல் முரசு எக்காளம்
கனவாத்திய முழங்க
கஞ்சுளி கபாளியே பஞ்சாயுதமாரியே
கண்ணாயிர முடைய உமையே
கனவெடி மத்தாப்பு பாணவேடிக்கையுடன்
காமாக்ஷி வீதி வருக
காவலர் பாவலர் நாவலர் துதிகொள
யியாவரும் புகழ்ந்து போற்ற
கர்தலமாக பால் காவடி அபிஷேகம்
கனமுடன் செய்து வருக
கங்காளி பைரவி தெங்கு திருவெண்ணெய் நகர்
முத்துமகமாரி யுமையே. (7)

சேல்விழி மாதரால் காலமுக்காலமும்
சேயனுன் துன்ப முற்றேன்

சித்தமது சிதரியே பக்தர்களை தூரியே
செய்திடும் வினையனந்தம்
சிற்றறிவிற் சிற்காலம் அற்பர்களுடன் கூடி
சிந்தை மிகவே தளர்ந்தேன்
சிறியனென் றிரேகத்தில் கூரம் புதனை பூண்டு
சித்தமுடன் வணங்கலானேன்
சிரசினில் மகுடமென பாம்பணி சிங்காரி
சிறுநகை பவள சொரூபி
சிங்கமெனு மகிஷனை அங்கம் பிளந்திட
சீரியேமாரி கொன்றாய்
சிறுவனுன் மீதினில் பிரியமாய் துதித்திட
செய்தவினை பவமறுப்பாய்
சீர்புகழ் வெண்ணெய் நகர் ஈசான்ய திக்கிலமர்
முத்துமகமாரி யுமையே:

தண்கொண்ட பத்மமலர் முத்துமகமாரியே
தரணியிலுனை துதிக்க
தண்டாயுதன்குகன் சண்டிகேஸ்வரருடன்
தும்பிக்கை முகனும் சூழ
தாயான மங்களவல்லி கிருபாபுரி
தழைத்து புகழ்கொண்ட சுந்தரர்
தங்குபுகழ் வைகுந்தர் ஜனகவல்லியம்மனும்
தக்கனு மன்பக்கம் சூழ
தழை வெண்ணெய்காளியும் மூலை மகமாரியும்
தாயான அங்காளியும்

தர்மமிகு த்ரௌபதா ஐய்யனுர் கெங்கையும்
மெய்கண்டார் சந்நதியானதெல்லாம்
தக்கதொரு காவலாய் எக்கலா தேவியாய்
மக்கள்வினை அறுக்க நின்ருய்
தனதான்யம் பெருகிட நீர் நிலகுடிவளம் தழைத்தோங்க
தயைபுரி முத்துமகமாரியுமையே (9)

தத்திமித்திமியென தாளமொடு மத்தளம்
தரணிபுகழ் முரசு மார்க்க
தண்டையொடு வெண்டையம் மண்டிட காலினில்
தாண்டவமாடும் தாயே
தயாபரி ரேணுகா பரமேஸ்வரி ஈஸ்வரி
டமரகம் உடுக்க சூலம்
தளமிகும் அஸ்தத்தில் பலமான சிலதரி
பரபிர்ம சுரூபி நீயே
தங்குபுகழ் வெண்ணெய் நகர் வேளாள மரபிவரு
சேய்துரை சாமி என்போன்
தமியொடு உன்மீது ஆவலாய் பதிகம்
தான்பாட நேர்ந்தகுற்றம்
தான்மிகு உண்டாயின் தர்கார்த்து ரக்ஷிப்ப
தாகுமது நினது கடனே
தரணிபுகழ் திருவெண்ணெய் நகரினிலமர்ந்தோங்கும்
முத்து மகமாரியுமையே (10)

அன்னையாய் யுலகெலாம் திருவெண்ணெயிலமர்ந்திட்ட
அம்மணி உந்தன் மீதில்
அடியனுன் பாடிடும் பதிகமதில் சொற்குற்றம்
பொருட் குற்றமது விருந்தால்

அருங்கவி புலவர்கள் மற்றுள பெரியோரும்
அன்பு என்மீதில் வைத்து
அன்னை தன் சேய்குற்றம் அகமதில் பொருத்தல் போல்
ஆதரித் தருளவேண்டும்
அறிவறியவரிதான அம்மணி நீயு மென்மீ
தருட் பாலிக்க வேண்டும்
அசைசந்தம் தளை சீரறியாத சிறுவனுன்
அதிவினையம் கொண்டு வந்தேன்
அஞ்சலென ஆதரியின்பமுறசேயனை
அனவரதம் அன்பு பூண்டு
ஆலால சுந்தரரை ஆட்கொண்ட வெண்ணெய் நகர்
அமர்ந்த முத்து மகமாரியுமையே. (11)

சுபம். சுபம். சுபம்.

முற்றிற்று.

